செ.வெ.எண்.179/2018 நாள்: 02-05-2018

# மாவட்ட அளவிலான விவசாயிகள் நல்வாழ்வு பணிமனை கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் வேளாண்மை இயக்குநர் திரு.வ.தட்சிணாமூர்த்தி இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டுப்பாக்கம் வேளாண்மை அறிவியல் மைய கூட்ட அரங்கில் தமிழ்நாடு அரசு வேளாண்மைத்துறை மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையம் இணைந்து நடத்திய (கிஸான் கல்யாண் காரியசாலா) விவசாயிகள் நல்வாழ்வு சார்ந்த பணிமனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கு கூட்டத்தை துவக்கி வைத்து பேசிய வேளாண்மைத்துறை இயக்குநர், இந்தியாவில் வேளாண்மை சார்ந்த திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாட்டில் வேளாண்மை நடைபெறும் பரப்பளவும் குறைந்து வருகிறது. வேளாண்மை தொழில் புரியும் விவசாயிகளின் எண்ணிக்கையும் கல்வியறிவு பெற்று மாற்று வேலைவாய்ப்புகள் பெற்றதன் காரணமாக குறைந்து வருகிறது. இதனால் வேளாண்மை பரப்பளவு குறைந்தாலும் உற்பத்தி திறனை அதிகப்படுத்தியுள்ளோம். விவசாய தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்தாலும் நவீன தொழிற்நுட்பங்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தி வேளாண்மை உற்பத்தியில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது.

சராசரி மழை அளவு குறைந்ததாலும், கடும் வறட்சி ஏற்பட்டதினாலும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டது. 2016-17ஆம் ஆண்டில் இதனை ஈடுசெய்யும் வகையில் விவசாயிகளுக்கு ரூ.3800 கோடி பயிர்காப்பீட்டுத் தொகை காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து பெற்று வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் பயிர் சாகுபடி மட்டும் செய்யாமல் அதனுடன் விவசாயம் சார்ந்த தொழில்களிலும் ஈடுபட வேண்டும். நவீன தொழில் நுட்பங்களை பின்பற்ற வேண்டும். இதனை விவசாயிகள் அறிந்து பயன்பெறும் வகையில் இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும் என தெரிவித்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது, கிசான் கல்யான் காரியசாலா எனப்படும் விவசாயிகள் நல்வாழ்வு பணிமனைக் கூட்டம் இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் வட்டார வாரியாக 2.05.2018 அன்று நடத்தபடுகிறது. விவசாயிகள் தற்சமயம் ஈட்டிவரும் வருமானத்தை 2022ம் ஆண்டுக்குள் இருமடங்காக பெருக்கத் தேவையான உத்திகளை விவசாயிகளுக்கு தெரிவிப்பதற்காகவும் மத்திய மாநில அரசுகளின் நல்வாழ்வு திட்டங்களை தெரிவிப்பதற்காகவும் இந்த விவசாயிகள் நல்வாழ்வு பணிமனைக் கூட்டம் மத்திய அரசின் அறிவுரைப்படி நடத்தப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் மேம்பாட்டிற்கான அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து பங்கேற்கின்றன. விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்கள் அரசு சார்பில் செயல்படுத்தப்படுகிறது.

மண் வளபாதுகாப்பு திட்டத்தின் மண் மாதிரி பரிசோதனை மூலம் விவசாயம் மேற்கொண்டால் உற்பத்தி செலவு குறைகிறது. வருமானத்தை அதிகரிக்கலாம். நுண்ணீர் பாசன திட்டத்தில் சிறுகுறு விவசாயிகளுக்கு 100 சதவிகதம் மானியத்திலும் மற்றவர்களுக்கு 75 சதவிகித மானியத்திலும் சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படுகிறது. PMFPY (Pradhan Mantri Fasal Bima Yojana) எனப்படும். பாரத பிரதமரின் புதிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் விவசாயிகள் எதிர்பாராமல் நேரிடும் பயிர் இழப்புகளின் மூலம் எற்படும் நட்டத்தைப் முற்றிலுமாக தவிர்க்க முடியும்.

விவசாயிகள் உழவன் செயலியை தங்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்வதன் மூலம் துறையில் செயல்படுத்தப்படும் மானியத் திட்டங்கள், இடுபொருள் முன்பதிவு, பயிர் காப்பீட்டு விவரம், உரங்கள் இருப்பு நிலை, விதை இருப்பு நிலை, வேளாண் இயந்திரம் வாடகை மையம், சந்தை விலை நிலவரம், வானிலை முன் அறிவிப்பு மற்றும் உதவி வேளாண் அதிகாரி வருகை போன்ற தகவல்களை தங்கள் கைப்பேசியின் மூலமாகவே தெரிந்துக்கொள்ள முடியும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கூட்டுப்பண்ணை திட்டத்தில் 3 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.5 லட்சம் மதிப்பிலான வேளாண்மை இயந்திரங்களை இயக்குநர் வழங்கினார். மேலும் விவசாயத்தில் சிறந்த விளங்கிய விவசாயிகளுக்கு சான்றிழ்களையும், தலா ரூ.10000 ரொக்க பரிசினையும் இயக்குநர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விவசாயிகளுக்கு விவசாயம் சார்ந்த துறைப் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் தொழிற்நுட்ப உரையாற்றினார். செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், வேளாண்மை அறிவியல் மையத்தலைவர் முனைவர்.க.வேல்முருகன், இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.பி.ஜே.குணசேகரன், கால்நடை அறிவியல் ஆராய்ச்சி நிலை தலைவர் திரு.அ.கோபி மற்றும் விவசாயிகள் பெருந்திரளாக பங்கேற்றனர். இந்நிகழ்ச்சியில் வேளாண்மை சார்ந்த துறைகளில் கண்காட்சி ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது.

**செய்தி வெளியிடுபவர்,**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**

**காஞ்சிபுரம்.**